# The Wolf and the Lamb...!

### ஆங்கில வடிவில்:

Once, a little lamb was grazing on a meadow, along with a flock of sheep. It found some grass at the edge of the field. And it went away from the others.

When it was grazing, it didn't notice a wolf was closely following it. However, when it pounced on her, it was quick to start pleading, 'Please, please don't eat me yet. My stomach is full of grass. If you wait a while, grass will be digested, and then you can taste me.'

The wolf thought that was a good idea, so he sat down and waited. After a while, the lamb said, 'If you allow me to dance, the grass in my stomach will be digested faster. ' Again the wolf agreed.

While the lamb was dancing, it had a new idea. It said, 'Please take out the bell around my neck. If you ring it as hard as you can, I will be able to dance even faster. ' The wolf took the bell and rang it as hard as he could. The Shepherd heard the bell ringing and quickly sent his dogs to find the missing lamb. The barking dogs frightened the wolf away and saved the lamb's life.

**Moral:** Physical strength is not always sufficient. Sometimes, weaker people with smart minds can overcome physically strong ones!

### தமிழ் வடிவில்:

ஒருமுறை, ஒரு சிறிய ஆட்டுக்குட்டி ஆட்டு மந்தையுடன் ஒரு புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது.. வயல் விளிம்பில் சில புல் இருப்பதைக் கண்டு மற்ற ஆடுகளிடமிருந்து அந்த ஆட்டுக்குட்டி விலகி சென்றது.

ஒரு ஓநாய் அதை நெருக்கமாகப் பின்தொடர்வதை கவனிக்காமல் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. ஓநாய் ஆட்டுக் குட்டியின் மீது பாய முயலும் போது, 'தயவு செய்து, என்னை சாப்பிட வேண்டாம். என் வயிறு நிறைய புல் நிறைந்திருக்கிறது. சிறிது நேரம் நீங்கள் காத்திருந்தால், என் வயிற்றில் இருக்கும் புல் நன்றாக செரித்து விடும், பிறகு நீங்கள் என்னை ருசிக்கலாம்" என்றது ஆட்டுக் குட்டி.

ஓநாய் இது ஒரு நல்ல யோசனையாக இருக்கிறது என்று நினைத்து, ஆட்டுக்குட்டி கூறியது போலவே கீழே உட்கார்ந்து காத்திருந்தது.

சிறிது நேரத்திற்கு பிறகு, ஆட்டுக்குட்டி, 'நீ என்னை நடனமாட அனுமதித்தால், என் வயிற்றில் உள்ள புல் இன்னும் வேகமாக செரித்துவிடும்" என்றது. ஓநாய் அதற்கும் ஒப்புக்கொண்டது.

ஆட்டுக்குட்டி நடனமாடிக் கொண்டிருக்கும் போது, அதற்கு ஒரு புதிய யோசனை தோன்றியது. ஆட்டுக்குட்டி 'தயவு செய்து என் கழுத்தில் கட்டியிருக்கும் மணியை கழற்றி வேகமாக ஓசை எழுப்பினால் நான் இன்னும் வேகமாக நடனமாடுவேன்" என்று ஓநாயிடம் கூறியது. ஓநாய் மணியை கழற்றி தன்னால் முடிந்த வரை ஓசையை எழுப்பியது.

ஆடு மேய்ப்பவர் மணி ஓசையைக் கேட்டதும் காணாமல் போன ஆட்டுக் குட்டியைக் கண்டுபிடிக்க தன்னுடைய நாய்களை அனுப்பினான். நாய்கள் குரைத்துக் கொண்டு வந்ததைப் பார்த்த ஓநாய் பயந்து ஓடிவிட்டது. பின்னர் நாய்கள் ஆட்டுக்குட்டியின் உயிரைக் காப்பாற்றின.

**நீதி :** உடல் வலிமை மட்டும் எப்போதும் உதவாது. சில நேரங்களில், புத்திசாலி மனம் கொண்ட பலவீனமானவர்கள் தன்னை விட உடல் வலிமையானவர்களை வெல்ல முடியும்!

# Dog Owner Reply to Shopkeeper...!!

**ஆங்கில வடிவில்:**

One night when a shopkeeper was just about to close his shop, a dog came to his shop. The dog was holding a bag in his mouth. When the shopkeeper opened the bag, he saw a list of items and money in the bag. The shopkeeper took the money and placed all the items in the bag written on the list. Immediately the dog picked up the bag and left. The shopkeeper decided to follow the dog to meet the dog's owner.

That dog waited at the bus stop. Soon the bus came and the dog got onto the bus. After that when the conductor came, the dog moved forward to show his neck belt. The conductor saw it had money and address in the neck belt. The conductor took the money and kept the ticket in his neck belt.

When the bus reached the destination, the dog started to wag his tail to indicate that he wanted to get down. The bus stopped and the dog got down. The shopkeeper was still following that dog. The shopkeeper saw that after walking some distance dog reached a house and knocked on the door of that house. A person came out who was the owner of the dog. When the dog owner saw the dog, he started to beat it with a stick very badly.

The shocked shopkeeper who was following dog, went to dog owner and asked him, 'Why are you beating the dog?' Owner replied, 'He disturbed my sleep. Instead it could have taken keys with him...!'

**Moral :** There are no end to expectations of people.

## தமிழ் வடிவில்:

ஒரு நாள் கடைக்காரர் தன்னுடைய கடையை அடைக்கும் நேரத்தில் ஒரு நாய் ஒன்று கடைக்கு வந்தது. அந்த நாயின் வாயில் ஒரு பை இருந்தது. கடைக்காரர் அந்த பையை திறந்த போது அந்த பையில் சில பொருட்களின் பட்டியலும் பணமும் இருந்தது. கடைக்காரர் பணத்தை எடுத்துக் கொண்டு, அந்த பட்டியலில் இருந்த பொருட்களை அந்த பையில் வைத்தார். உடனடியாக நாய் அந்த பையை எடுத்துக் கொண்டு சென்றது. கடைக்காரர் அந்த நாயின் உரிமையாளரைச் சந்திக்க நாயை பின்தொடர முடிவு செய்தார்.

நாய் பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தது. பேருந்து வந்ததும் நாய் பேருந்தில் ஏறியது. நடத்துனர் வந்த போது, நாய் தனது கழுத்து பட்டையை காட்டி முன்னோக்கி நகர்ந்தது. நடத்துனர் கழுத்து பட்டையில் பணமும், முகவரியும் இருந்ததை பார்த்தார். நடத்துனர் பணத்தை எடுத்துக்கொண்டு நாயுடைய கழுத்து பட்டையில் பயணச்சீட்டை வைத்தார்.

பேருந்து பயண இலக்கை அடைந்த போது, தான் கீழே இறங்க வேண்டும் என்பதை குறிக்க நாய் தன்னுடைய வாலை ஆட்டியது. பேருந்தும் நின்றதும் நாய் பேருந்தில் இருந்து கீழே இறங்கியது. கடைக்காரர் அந்த நாயைத் தொடர ஆரம்பித்தார். சில தூரம் கடந்து சென்றதும், நாய் ஒரு வீட்டின் கதவை தட்டுவதை கடைக்காரர் பார்த்தார். நாயின் உரிமையாளர் வீட்டை விட்டு வெளியே வந்தார். அவர் நாயை கண்டவுடன், குச்சியை கொண்டு மோசமாக அடிக்கத் துவங்கினார்.

நாயை பின்தொடர்ந்த அந்த கடைக்காரர் மிகவும் அதிர்ச்சியடைந்து, நாயின் உரிமையாளரிடம் சென்று, 'நீங்கள் ஏன் இந்த நாயை அடிக்கிறீர்கள்?" என்று கேட்க, நாயின் உரிமையாளர் 'வீட்டுச் சாவியை எடுத்துச் செல்லாமல், என்னை தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டது" என்றார்.

**நீதி :** மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு எல்லையே இல்லை.

# Old Man's Honesty...!

**ஆங்கில வடிவில்:**

Once an old man had to travel with a lot of luggage by train. So, he went to the ticket counter and asked for the train as well as the luggage ticket for his travel to another city.

Seeing the old man, the clerk recognized him. The clerk was an acquaintance of that old man. While giving a ticket, he said, You don't have to take luggage ticket and I will be on the same train and will ensure you that no one asks you for a ticket for extra luggage.

The old man asked him, Ok... But how far you would be traveling? The clerk told him the name of the station and said, Don't worry even if you have to travel further then I will instruct ticket checker and you travel without any problem. The old man replied, But how far will that person accompany me? The clerk replied he will accompany you to the last station on the train.

The old man replied, But my journey will not stop there. Clerk Shocked and asked, How far will you be traveling? The old man replied I have to go beyond all these worldly stations. After death, I will go to see God. Who will accompany me there and help me get through there?

The clerk was speechless...!! The old man explained, This train is public property and no one should be allowed to carry extra baggage and travel without paying the correct fare. Today, I may be able to cleverly evade this authority but I can not fool God. Listening to this, the clerk realized his mistake and apologized to the old man and handed him a ticket for extra luggage.

**Moral:** Though our deeds may not be known to others, God always knows what we have done - Good or Bad

## தமிழ் வடிவில்:

ஒருமுறை ஒரு வயதான முதியவர் ஒருவர் பயணமூட்டையை எடுத்துக் கொண்டு ரயில் மூலம் பயணிக்க வேண்டியிருந்தது. எனவே, அவர் பயணச்சீட்டு கவுண்டருக்கு சென்று தனது பயணத்திற்கும் தான் எடுத்துச் செல்லும் பயணமூட்டைக்கும் சேர்த்து பயணச்சீட்டு கேட்டார்.

வயதான முதியவரை பார்த்த போது எழுத்தர் அடையாளம் தெரிந்துக் கொண்டார், அவர் அவருக்கு நன்கு பழக்கமுள்ள நபர் என்று. பயணச்சீட்டு கொடுக்கும்போதே, 'நீங்கள் பயணமூட்டைக்கு பயணச்சீட்டு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை, நான் அதே ரயிலில் உங்கள் கூடவே இருப்பேன், பயணமூட்டைக்கு யாரும் உங்களிடம் பயணச்சீட்டு கேட்கமாட்டார்கள் என்று உறுதிப்படுத்துகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட முதியவர் 'நீங்கள் எவ்வளவு தூரம் வரை என்னுடன் பயணிப்பீர்கள்?" என்று கேட்க, எழுத்தர் ரயில் நிலையத்தின் பெயரைக் கூறி, கவலைப்பட வேண்டாம் 'நீங்கள் அந்த ரயில் நிலையத்தை கடந்து பயணிக்க வேண்டும் என்றாலும், பயணச்சீட்டு பரிசோதனை செய்பவரிடம் நான் தெரிவித்து விடுகிறேன். நீங்கள் எந்த பிரச்சனையும் இல்லாமல் பயணம் செய்யலாம்" என்றார்.

வயதான மனிதர் உடனே, 'எவ்வளவு தூரம் அந்த நபர் என்னுடன் பயணிப்பார்?" என கேட்க, எழுத்தர் 'அவர் கடைசி ரயில் நிலையம் வரை உங்களுடன் பயணிப்பார்" என்றார்.

வயதான மனிதர், 'என்னுடைய பயணம் அத்துடன் முடிவடையாது" என்றார். எழுத்தர் அதிர்ச்சியடைந்து, 'எவ்வளவு தூரம் நீங்கள் பயணிப்பீர்கள்?" என்று கேட்டார். வயதான மனிதர், 'இந்த உலகின் எல்லா இடங்களுக்கும் அப்பால் செல்ல வேண்டும். இறந்த பிறகு நான் கடவுளை சென்று பார்ப்பேன். அங்கு வரை யார் எனக்கு துணையாக வருவார்கள்? என்று கேட்டார் அந்த வயதான முதியவர்.

எழுத்தர் வாயடைத்து போனார்..!! 'இந்த ரயில் பொதுச் சொத்து என்பதால், சரியான கட்டணத்தை செலுத்தாமல் யாரையும் பயணிக்க அனுமதிக்கப்படக் கூடாது" என்று வயதான முதியவர் விளக்கினார். இன்று, நான் புத்திசாலித்தனமாக இந்த அதிகாரிகளை ஏமாற்ற முடியும். ஆனால் நான் கடவுளை ஏமாற்ற முடியாது..' இதைக்

கேட்ட எழுத்தர் அவருடைய தவறை உணர்ந்து, முதியவரிடம் மன்னிப்பு கேட்டு பயணமூட்டைகளுக்கான கூடுதல் பயணச்சீட்டை கொடுத்தார்.

**நீதி:** நம்முடைய செயல்கள் மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும், நாம் செய்யும் நல்லது கெட்டது அனைத்தயும் கடவுள் எப்போதும் கவனித்து கொண்டிருப்பார்.

---

## Giving a Advice...!!

**ஆங்கில வடிவில்:**

Once a mother got worried because his son eats excessive sweet and she tried many ways to stop him from eating but she can't. So she decided to take him to a wise man who was respected by everyone in the village.

Mother went to the wise man with her son. There she met him and said, 'My son, eats sweets every time. Will you please tell him that it's bad for his health??'

After listening to her, the wise man thought for a while and refused to give any advice to that boy at that time. He asked the mother to meet him after a month.

Later, she came to meet him after a month. He looked at the boy and said, 'Boy, You should stop eating sugar because it's not good for health'. The boy promised that he will not eat sugar anymore.

A few days later she again came to that wise man and said, 'Thank you for your help. When I first came to you. Why didn't you told my son to stop eating sugar right then?? Why did you ask me to meet you after a month??'

The wise man smiled and replied, 'At that time, I eat sweet myself and I didn't have right to tell your kid to stop eating sweets. But now I

don't eat sweet anymore. That's why I was able to tell your kid to stop eating sweet.'

**Moral:** There is more power to a person's example than mere words.

### தமிழ் வடிவில்:

ஒருமுறை தன்னுடைய மகன் அதிகமாக இனிப்பு சாப்பிடுவதை நினைத்து கவலை கொண்ட தாய், அவனுடைய பழக்கத்தை மாற்ற பல வழிகளில் முயன்றாள், ஆனால் அவளால் முடியவில்லை. கிராமத்தில் எல்லோரும் மரியாதையாக நடத்தும் ஒரு ஞானியிடம் தன்னுடைய மகனை அழைத்துச் செல்ல முடிவு செய்தாள்.

தாய் தன்னுடைய மகனை அழைத்துக் கொண்டு அந்த நபரை சந்தித்து, 'என்னுடைய மகன் எப்பொழுதும் இனிப்பு சாப்பிட்டு கொண்டே இருக்கிறான். இது உடல் நலத்திற்கு கேடு என்று தயவு செய்து அவனுக்கு அறிவுரை கூற முடியுமா?" என்று கேட்டுக் கொண்டாள்.

தாய் கூறுவதை கேட்ட, அந்த ஞானி சிறிது நேரம் யோசித்தார், அந்த நேரத்தில் அந்த பையனுக்கு எந்த அறிவுரையும் கொடுக்க மறுத்துவிட்டார். ஒரு மாதம் கழித்து அவனை அழைத்து வரும்படி அந்த தாயிடம் கூறினார்.

தாய் ஒரு மாதம் கழித்து தன் மகனை அழைத்துக் கொண்டு வந்தாள், ஞானி அந்த சிறுவனை பார்த்து 'நீ இனிப்பு சாப்பிடுவதை நிறுத்த வேண்டும், ஏனென்றால் அது ஆரோக்கியத்திற்கு நல்லது அல்ல" என்று அறிவுறுத்தினார். சிறுவனும் இனிமேல் இனிப்புகளை சாப்பிட மாட்டேன் என்று வாக்குறுதி அளித்தான்.

அதற்கு பிறகு ஒரு மாதம் கழித்து மகனுடைய தாய் திரும்பி வந்து, 'உங்களுடைய உதவிக்கு நன்றி. நான் முதலில் உங்களிடம் வந்த போது. இனிப்பு சாப்பிடுவதை நிறுத்தும்படி ஏன் என் மகனிடம் கூறவில்லை? அதற்கு மாறாக ஒரு மாதம் கழித்து ஏன் வர சொன்னீர்கள்?" என்று கேட்டாள்.

ஞானி சிரித்தபடியே 'நான் அந்த நேரத்தில் இனிப்பு சாப்பிட்டு கொண்டிருந்தேன், உன் மகனிடம் இனிப்பு சாப்பிடாதே என்று கூறுவதற்கு அப்போது எனக்கு தகுதி இல்லை,

ஆனால் இப்போது நான் இனிப்பு சாப்பிடுவதை விட்டுவிட்டேன், அதனால் உன் மகனிடம் இனிமேல் இனிப்பு சாப்பிடக்கூடாது என்று கூற முடிந்தது" என்றார்.

**நீதி :** வெறும் வார்த்தைகளை விட ஒரு நபர் உதாரணமாக திகழ்வதற்கு அதிக சக்தி உள்ளது.

---------------------------------------------------------------------------------

## Cost of Saree...!!

**ஆங்கில வடிவில்:**

Once Shri Lal Bahadur Shashtri Ji went to a textile mill. After going around the mill, there he saw some sarees on display. Seeing those, Shashtri Ji requested the owner of the mill to show him some sarees.

The owner showed him various kinds of sarees. Shastri Ji liked one of those sarees and asked the owner about its price. Mill owner told him that the cost of that saree was 800 rupees.

After knowing saree cost, Shashtri Ji said, 'This is too expensive. Can you please show me sarees which are less expensive? ' So, the mill owner started showing him other sarees, quoting prices like Rs.500, Rs.400 and so on.

Shashtri Ji said, 'These are still too expensive... Are there cheaper sarees which a poor person like me can afford??'

The owner was surprised by his response and said, 'You are Prime Minister of India. How can you be called poor?? Moreover, You don't have to pay for any saree you take because this would be a gift for you..'

No.. My dear friend, I can't accept such expensive gifts, 'Yes, I may be the Prime Minister, but that does not mean that I should accept all

those things that I cannot afford. I have some limitations. Please show me some cheaper sarees, I will buy those that I can afford.'

Finally, Shashtri Ji purchased a cheaper saree which he could afford for his wife.

**Moral :** It is good to live simple at any stage.

**தமிழ் வடிவில்:**

ஒருமுறை ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி ஜி ஒரு ஜவுளி ஆலைக்குச் சென்றார். ஆலையைச் சுற்றிச் சென்றபின், அங்கே சில புடவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அவற்றைப் பார்த்த சாஸ்திரி ஜி, சில சேலைகளைக் காட்டுமாறு மில் உரிமையாளரிடம் கேட்டுக்கொண்டார்.

உரிமையாளர் அவருக்கு பல்வேறு வகையான புடவைகளைக் காட்டினார். சாஸ்திரிக்கு அவர் காண்பித்த புடவைகளுள் ஒன்று அவருக்கு பிடித்திருந்தது, அந்த புடவையின் விலை என்னவென்று உரிமையாளரிடம் கேட்டார். அந்த சேலையின் விலை 800 ரூபாய் என்று மில் உரிமையாளர் அவரிடம் கூறினார்.

சேலை விலையை அறிந்த பிறகு, சாஸ்திரி ஜி, 'இது மிகவும் விலை உயர்ந்தது. தயவுசெய்து குறைந்த விலை கொண்ட புடவைகளை எனக்கு காட்ட முடியுமா .. ' என்று கேட்க, ஆலை உரிமையாளர் அவருக்கு 500, 400 ரூபாய் விலையுள்ள புடவைகளை காட்டினார்.

சாஸ்திரி ஜி, ' இவை இன்னும் விலை உயர்ந்தவை ... என்னைப் போன்ற ஒரு ஏழை மனிதனால் வாங்கக்கூடிய மலிவான புடவைகள் உள்ளனவா?

அவரது பதிலைக் கண்டு உரிமையாளர் ஆச்சரியப்பட்டு, ' நீங்கள் இந்தியாவின் பிரதமர். உங்களை எப்படி ஏழை என்று அழைக்க முடியும் ?? மேலும், நீங்கள் எடுக்கும் எந்த சேலைக்கும் நீங்கள் பணம் செலுத்த வேண்டியதில்லை, ஏனெனில் இது உங்களுக்கு ஒரு பரிசாக இருக்கும்.

இல்லை .. என் அன்பான நண்பரே, இதுபோன்ற விலையுயர்ந்த பரிசுகளை என்னால் ஏற்க முடியாது, ' ஆம், நான் பிரதமராக இருக்கலாம், ஆனால் என்னால் வாங்க முடியாத எல்லாவற்றையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அர்த்தமற்றது. எனக்கும் சில எல்லைகள் உள்ளன. தயவுசெய்து சில மலிவான புடவைகளை எனக்குக் காட்டுங்கள், என்னால் வாங்கக்கூடியவற்றை வாங்குவேன்.

இறுதியாக, சாஸ்திரி ஜி தனது மனைவிக்கு தன்னால் வாங்கக்கூடிய மலிவான சேலையை வாங்கினார்.

**நீதி:** எந்த நிலையிலும் எளிமையாக வாழ்வது நல்லது.

---

## The Rich Man and the Zen...!

**ஆங்கில வடிவில்:**

A great rich man met Zen saint, and asked, 'Write down something to remind me that, I am happy with my family.'

Then the Saint took a piece of paper and wrote, 'The father will die, the son will die, the grandson will die.'

After reading that he got very angry, 'I asked you to write down something to remind me that I am happy with my family' but you have written some lines, that hurts me a lot, said angrily.

The saint says, 'Yes, I also have written lines for happy living with family', as you have asked. I will explain to you how it will be if your son dies first, it will cause great pain in everybody's mind. Likewise, if your grandson dies first, it will be an unbearable experience. Anyway, every person in your family will die continuously. That's the nature of life. So I have written it on that paper.

**Moral :** Everyone born in this world will surely have pain.

## தமிழ் வடிவில்:

ஒரு பெரிய பணக்காரன் ஒருவன் ஜென் துறவியை சந்தித்து, 'நான் என் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதை நினைவூட்டும் வகையில் ஏதாவது எழுதிக் கொடுங்கள்" என்று கேட்டான்.

அதற்கு அந்த துறவி ஒரு காகிதத் துண்டை எடுத்து, அதில் 'தந்தை இறக்கிறான், மகன் இறக்கிறான், பேரன் இறக்கிறான்" என்று எழுதிக் கொடுத்தார்.

அதைப் படித்த அவனுக்கு மிகவும் கோபம் வந்த. 'நான் என் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதை நினைவூட்டும் வகையில் ஏதாவது எழுதிக் கொடுங்கள் என்று கேட்டால், நீங்கள் என் மனம் புண்படும் வகையில் எழுதித் தருகிறீர்களே!" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

அதற்கு துறவி 'ஆமாம். நானும் நீ கேட்டது போல் உன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான வரிகளை தான் எழுதியுள்ளேன்". அது எப்படி என்பதை நான் உங்களுக்கு விளக்குகிறேன், ஒரு வேளை உன் மகன் முதலில் இறந்துவிட்டால், அது அனைவரின் மனதிலும் பெரும் வேதனையை ஏற்படுத்தும். அதுவே உன் பேரன் முதலில் இறந்தால், அது தாங்க முடியாத துயரமாக இருக்கும். எப்படியிருந்தாலும் உங்கள் குடும்பத்தில் இருப்பவர்கள் வரிசையாக இறக்கப் போகிறார்கள். அதுவே வாழ்க்கையின் இயல்பு. ஆகவே அதைதான் நானும் அந்த காகிதத்தில் எழுதியுள்ளேன்.

**நீதி :** இந்த உலகில் பிறந்த அனைவருக்குமே வலி நிச்சயம் இருக்கும்.